அனைத்துக் குளங்களையும் நிரப்பித் தர அரசு செயற்குறிப்புகள் ஏதாவது உண்டா? உடனடி ஏற்பாடு செய்வதற்கு ஆவன செய்ய முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சடையனேரி கால்வாய் தாமிரபரணி ஆற்றினுடைய உபரி நீரைக்கொண்டு 1974-ல் அமைக்கப்பட்டது. இந்தக் கால்வாயின் மூலம் ஏறத்தாழ 12 குளங்களுக்கு தண்ணீர் நிரப்பமுடியும். இது ஒரு முக்கியமான கால்வாய் என்பதை அரசு நன்றாக அறியும். ஆகவே வெள்ளப் பெருக்கு ஏற்படுகின்ற காலத்திலே தாமிரபரணி ஆற்றிலே ஏறத்தாழ 100 கன அடி மட்டும்தான் அந்தக்கால்வாயில் செல்லமுடியும் என்ற காரணத்தினாலே இன்றைக்கு அந்தக் கால்வாயை அகலப்படுத்துவது மிக முக்கியம் என்று இந்த அரசு கருதி ஏறத்தாழ ரூபாய் 5.75 கோடி செலவிலே ஒரு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அந்தத் திட்ட மதிப்பீடு அரசினுடைய பரிசீலனையில்இருக்கிறது. ஆகவே அந்தப் பகுதியில் இருக்கின்ற பாசன வசதியை மேம்படுத்துவதற்காக இந்தக் கால்வாயை பலப்படுத்துகின்ற பணியை இருக்கின்ற நிதியாதாரங்களைப் பொறுத்து இந்தத் திட்டம் சேர்த்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. செல்லதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அமைச்சர் அவர்களுக்கும் எங்களுடையதங்கத்தலைவி புரட்சி தலைவி அவர்களுக்கும் நெஞ்சார நன்றியைத்தெரிவித்துக் கொள்வதோடு சடையநேரி குளம் நிறைந்ததும் செம்பரிகுளம் படுகைக்கு தண்ணீர் வந்து—அங்கே சுமார் 300 விவசாயிகள் விவசாயம் செய்கிறார்கள்— அது முழுமையையும் அந்தத் தண்ணீர் அழித்து விடுகிறது, அதைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு ஏதேனும் செயற்குறிப்பு வைத்திருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கேட்கப்பட்டிருக்கின்ற கேள்வி சடையநேரி கால்வாயைப் பற்றி, அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 327— திரு. எஸ். அன்பழகன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

327—

நாமக்கல் வட்டத்தில் புதிதாக தொகுப்பு வீடுகள்

*1746—திரு. எஸ். அன்பழகன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நாமக்கல் வட்டத்தில் புதிதாகத் தொகுப்பு வீடுகள் கட்டும் பணி தொடங்கப்பட உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை வீடுகள் கட்டப்படும்?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்,

(ஆ) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் நாமக்கல் வட்டத்தில் 391 வீடுகள் கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது,

திரு. எஸ். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடுகளை ஒதுக்கும்போது ரிசர்வ் தொகுதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழும் தொகுதிக்கோ அல்லது ஒன்றியத்திற்கோ முன்னுரிமை கொடுத்து, அதிக வீடுகள் ஒதுக்குவதற்கு அமைச்சர் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் வட்டத்தில் சுமார் 428 வீடுகள் இப்போது அனுமதிக்கப்பட்டுள்ளது. 339 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 89 வீடுகளும் 31 மார்ச் 1992-க்குள் கட்டி முடிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியான அந்தத் தொகுதியைப் பொறுத்த வரையில் 428 வீடுகளே அதிகம் என்று கருதுவதால் அது பற்றிப்பரிசீலிப்பதற்கில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டுமான செலவுகள் எல்லாம்— சிமெண்ட் விலை, செங்கல் விலை எல்லாம் ஏறிவிட்டதால் தொகுப்பு வீடுகள் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதியில் தான் ஒதுக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட வீடுகள் கட்டும்போது இந்தச் செலவுகள் அதிகமாவதால் அந்தத் தொகையை உயர்த்தித் தர நம்முடைய அமைச்சரவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் நம்பிக்கை நட்சத்திரமான, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடம் சொல்லி அதிக நிதி ஒதுக்கி ஆவன செய்வாரா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கட்டி முடிக்கப்படுகிற வீடுகளின் நிலைமைகளை அறிந்து, தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவியினுடைய ஆலோசனையின் பேரில் அது பற்றிப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1992 மார்ச் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ப. சரஸ்வதி.

திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடுகளை ஒதுக்குகின்ற நேரத்தில், 25 வீடுகளை ஒதுக்குகின்றார்கள். அரிஜனத் தெருவில் குலுக்கல் முறையில் 25 வீடுகளைக் கொடுத்து விட்டால், மீதி இருப்பவர்கள் அங்கே குடியேற முடியாது. எங்களுக்கும் கட்டிய பிறகுதான் அங்கே நீங்கள் செல்லவேண்டுமென்று ஊர்க்கட்டு செய்து, தகராறு செய்கின்ற காரணத்தினால், ஒவ்வொரு கிராமமாக கேட்கப்பட்டுள்ள வீடுகளைக் கட்டி முடிக்க அரசு ஆவன செய்யுமாஎன்பதை அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி பரிசீலனை செய்யப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 328. திரு. வி. பி. சந்திரசேகர். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

328—

ஐரோப்பிய பொருளாதாரத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப் பட்ட குடிநீர்த் திட்டம்.

*3899—திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

பொள்ளாச்சி நகரம் வழியாக அம்பராம்பாளையம் ஆற்றிலிருந்து பொள்ளாச்சிக்கு அருகாமையில் அமைந்துள்ள கிராமப் பகுதிக்குச் செல்லும் ஐரோப்பிய பொருளாதாரத் திட்டத்தின் (E.E.C.) மூலம் செயல்படுத்தும் குடிநீர்த் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொள்ளாச்சி நகரம் வழியாக அம்பராம்பாளையம் ஆற்றிலிருந்து பொள்ளாச்சிக்கு அருகாமையில் அமைந்துள்ள கிராம பகுதிகளுக்குச் செல்லும் ஐரோப்பிய பொருளாதாரத் திட்டத்தின் (ஈ.ஈ.சி.) மூலம் செயல்படுத்தப்படும் குடிநீர்த் திட்டம் நிறுத்தப்படவில்லை. பல்வேறு காரணங்களினால் திட்டப் பணிகள் மெதுவாக நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளையும் ஜூன் 1993-க்குள் முழுமையாக முடித்து திட்டத்தினை பயனுக்குக் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.